முருகப்பெருமான் துணை

**மகான் குங்கிலியக்கலய நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

14.07.2022, வியாழக்கிழமை

1. தரணி காக்கும் மகாசக்தியாக
தனிப்பெருங் கருணை வடிவாக
அறமாக வந்த அண்ணலே
அரங்கனே உன்பெருமை கூறி
2. கூறியே சுபகிருது மிதுனதிங்கள்
குறைவிலா முப்பான்திகதி குருவாரம்
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 30 நாள், 14.07.2022 வியாழக்கிழமை)
தெரிவிப்பேன் அருளாசி தன்னை
தேசிகனுக்கு குங்கிலியக்கலய நாயனார்யானும்
3. யானும் உலகநலம்பெற உரைப்பேன்
உயர்வான வாழ்வும் தேற்றமும்
ஞானம் கூடிய நடைமுறை மாற்றமும்
நல்ல தேட்டும் வளமும் கண்டிட
4. கண்டிட கலிகால மக்களே
கந்தவேலனே ஆற்றல்பட
தொண்டுவழி மக்களை தேற்ற
தேசிகன் அவதாரமாக இருக்க
5. இருக்கவே தேசிகன் வாழும்
இணையிலா பிரணவக் குடிலை
கருத்தாக வந்து அணுகியே
கருணைக்கடலே என வேண்டி
6. வேண்டியே திருவடி பற்றி
வேலவனின் சடாட்சர தீட்சை
உண்டான ஏற்றுப் பணிந்திட
உருதனை முருகா எனநாளும்
7. நாளும் பூசைசெய்து வேண்டிட
நம்பகமான உயர் மாற்றம்
காலமதில் சாதகமாய் கண்டு
கண்டுரைப்பேன் ஏற்றம் காண்கும்
8. காண்கவே உடல்பொருள் ஆவி
கணக்காய் பொறிபுலன் யாவும்
சண்முகனார் ஆசி அருள்
சர்வபலம் கொண்டதாகச் சிறந்து
9. சிறந்து தன்நிலை உயர்ந்து
சிறப்பறிவு கூடியும் இனிதே
அருந்தவப் பலனாக வரும்
அரங்கன் அன்னதான சேவையிலும்

10. சேவையிலும் பங்களிப்புச்செய்து
செப்பிடுவேன் ஞானவான்களாக
அவனிகாக்கும் தருமவான்களாக
அடையாளம் கூடி தேறுவர்

11. தேறுவர் உலகை மாற்றும்
தெய்வப் பிறவிகளாகவே இனி
ஆறுமுக அரங்கனார் மாறுவர்
அறிவித்த அருளாசி முற்றே

–சுபம்–